**"முறைசாரா கடன் முறைகளினால் சமூகத்தில் ஏற்படும் தாக்கங்கள்: நிந்தவூர் பிரதேச செயலகப் பிரிவை மையப்படுத்தியதோர் சமூகவியல் ஆய்வு"**


**Supervisor**
*Mrs. AWN. Naleefa,*
*Lecturer (Prob.),*
*Faculty of Arts & Culture*
*SEUSL*

**Researcher**
*Miss. N. Lumna,*
*Department of Social Sciences,*
*Faculty of Arts & Culture*
*SEUSL*


**ஆய்வுச் சுருக்கம்**


உலகில் பொரும்பாலான மக்கள் இன்னும் கிராமங்களிலேயே வாழ்கின்றனர். இலங்கையைப் பொறுத்தவரை ஏறக்குறைய 24000 கிராமங்கள் காணப்படுகின்றன. இக்கிராமிய துறையினருக்குரிய முக்கிய பிரச்சினையாக நிதிப் பற்றாக்குறை காணப்படுகிறது. எனவே கடன் வழங்குதல் என்பது இவர்களை பொறுத்தவரை அவசியமாகின்றது. இவர்களுக்கான கடன்கள் பெரும்பாலும் முறைசாரா கடன் மூலகங்களினாலேயே வழங்கப்படுகின்றது. நாட்டின் மொத்த கடனில் 75 முதல் 80 சதவீதம் வரை முறைசாரா துறையினராலேயே வழங்கப்படுகின்றது. பொதுவாக வட்டிக்கு கடன் கொடுப்போர், அடகு பிடிப்போர், தொழில் ரீதியாக கடன் கொடுப்போர், சங்கங்கள் , சீட்டு முறை, நிலச் சுவாந்தர்கள், தரகு முகவர்கள், வர்த்தகர்கள், உறவினர்கள், நண்பர்கள் என்பன முறைசாரா கடன் மூலகங்களாக கொள்ளப்படுகின்றன. இவற்றினூடாக இடம்பெறும் கடன் முறைகள் முறைசாரா கடன் முறைகளாகும்.

இன்று இம்முறைசாரா கடன் முறைகள் வெகுவாக அதிகரித்துக்கொண்டு வரும் சூழ்நிலையில் இதனால் ஏற்படும் தாக்கங்களும் அதிகரித்துள்ளது. அந்தவகையில் அம்பாரை மாவட்டத்தில் அமைந்துள்ள நிந்தவூர் பிரதேசத்தில் காணப்படும் முறைசாரா கடன் முறைகளை இவ்வாய்வு அடையாளங்காண முயற்சித்துள்ளது. இத்தகைய கடன் முறைகளினால் சமூகத்தில் பல்வேறுபட்ட தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன. இத்தகைய தாக்கங்களை கண்டறிந்து அவற்றிற்கான மும்மொழிவுகளை விதந்துரைக்க இவ்வாய்வு முனைந்துள்ளது. இவ்வாய்வின் பிரதான நோக்கமாக: நிந்தவூர் பிரதேசத்தில் காணப்படும் முறைசாரா கடன் முறைகளினால் சமூகத்தில் ஏற்பட்டுள்ள சமூக, பொருளாதார தாக்கங்களை கண்டறிதல் காணப்படுகிறது.

இவ்வாய்வானது முதலாம் நிலைத் தரவுகள் (Primary Data) மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் (Secondary Data) ஆகிய இரு வழி முறைகளில் தரவுகளை சேகரித்துள்ளது. முதலாம் நிலைத் தரவில் வினாக்கொத்து (Questionnaire), நேர்காணல் (Interview), அவதானம் (Observation), இலக்குக்குழுவுடனான கலந்துரையாடல் (Focus Group Discussion) போன்றவை மேற்கொள்ளப்பட்டுள்ளன. 20 வினாக்கொத்துக்கள் மூலம் நிந்தவூர் பிரதேசத்தின் குறிப்பிட்ட ஒரு பிரிவில் நோக்க மாதிரி நுட்பமுறை அடிப்படையில் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. 05 பேர் பிரதான தகவலாளர்களாக பயன்படுத்தப்பட்டுள்ளனர். 01 இலக்குக் குழுவுடனான கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு சேகரிக்கப்பட்ட தரவுகளைக் கொண்டு தொகை மற்றும் பண்புசார் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இறுதியாக இவ்வாய்வில் நிந்தவூர் பிரதேசத்தில் முறைசாரா கடன் முறைகளினால் சமூக உறவுகளில் விரிசல், சமூக அந்தஸ்த்தில் பாதிப்பு, குடும்ப சீரழிவுகள், விவாகரத்து, தகாத உறவுகள், தற்கொலை முயற்சி, சமூகத்திலிருந்து தலைமறைவாதல், கலாச்சார மற்றும் பண்பாட்டு

ரீதியான சீரழிவுகள், சமய கட்டமைப்பில் தாக்கம், கல்வி நடவடிக்கைகளில் பாதிப்பு, அதிகரித்த வட்டி, வருமானத்தில் பாதிப்பு, வறுமை, வாழ்க்கைச்செலவில் தாக்கம், சேமிப்பில் முடக்கம், சொத்திழப்பு போன்ற சமூக, பொருளாதார ரீதியான எதிர்மறையான தாக்கங்கள் அதிகமாக ஏற்பட்டுள்ளது என்பது கண்டறியப்பட்டுள்ளது.

***Key Words:*** முறைசாரா கடன், கடன் கொடுப்போர், கடன் பெறுவோர்.

## பொது சுகாதாரத்தை மேம்படுத்துவதில் எதிர்கொள்ளப்படும் சவால்கள்: ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவை மையப்படுத்திய ஓர் சமூகவியல் ஆய்வு

**Supervisor**
*Mr. M. Riswan,*
*Lecturer (Prob.),*
*Faculty of Arts & Culture*
*SEUSL*

**Researcher**
*Miss. MF. Asmiya Banu,*
*Department of Social Sciences,*
*Faculty of Arts & Culture*
*SEUSL*

### ஆய்வுச்சுருக்கம்

இன்றைய காலப்பகுதியில் பொது சுகாதாரம் (Public Health) பற்றிய கருத்துக்களும், அதன் மேம்பாடு தொடர்பான விழிப்புணர்வுகளும் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமே உள்ளன. அந்தவகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள கோறளைப்பற்று மேற்கு பிரதேசத்தில் காணப்படும் ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவை மையப்படுத்தியதாக இவ்வாய்வு அமைந்துள்ளது. இந்த சுகாதார வைத்திய அதிகாரி பிரிவானது பொது சுகாதாரத்தை மேம்படுத்துவதில் எத்தகைய சவால்களை எதிர்கொள்கின்றது என்பதை கண்டறிய இவ்வாய்வு முனைந்துள்ளது. சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு எதிர்நோக்கும் சமூக, பொருளாதார, சுற்றாடல் ரீதியான சவால்கள் எவை என்பதனை கண்டறிவதோடு அத்தகைய சவால்கள் பொது சுகாதாரத்தை மேம்படுத்துவதில் எத்தகைய தாக்கத்தை செலுத்துகின்றது என்பதையும் இவ்வாய்வு கண்டறிந்துள்ளது. இவ்வாய்வு ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு பொது சுகாதாரத்தை மேம்படுத்துவதில் எத்தகைய சவால்களை எதிர்கொள்கிறது என்பதை அடையாளப்படுத்தலை பிரதான நோக்கமாகவும், பொது சுகாதாரத்தை மேம்படுத்துவதில் சுகாதார நிறுவனங்கள் எதிர்கொள்ளும் சவால்களையும், பொது சுகாதார மேம்பாட்டில் சமூக எதிர்விளைவு எவ்வாறுள்ளது என்பதனை அடையாளம் காண்பதனையும் துணை நோக்கங்களாகக் கொண்டுள்ளது. இவ்வாய்வுக்கு முதலாம், இரண்டாம் நிலைத் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. முதல்நிலைத் தரவுகளில் வினாக்கொத்து, நேர்காணல், அவதானம், இலக்குக்குழு கலந்துரையாடல் போன்றவை மேற்கொள்ளப்பட்டுள்ளன. 100 வினாக்கொத்துகள் எளிய எழுமாற்று மாதிரியை பயன்படுத்தி வழங்கப்பட்டுள்ளன. 08 பேர் பிரதான தகவலாளிகளாக (Key Informants) பயன்படுத்தப்பட்டுள்ளனர். 02 இலக்குக்குழு கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத்தரவு சேகரித்தலில் பிரதேச செயலக அறிக்கைகள், புள்ளிவிபர கையேடுகள், நூல்கள், இணையத்தளங்கள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு சேகரிக்கப்பட்ட தரவுகளின் பகுப்பாய்வின்படி, ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவானது எதிர்கொள்ளும் சவால்களுக்கும், பொது சுகாதார மேம்பாட்டு செயற்பாடுகளுக்கும் இடையே எதிர்கணிய தொடர்பு காணப்படுகிறது என்பதையும் இவ்வாய்வு கண்டறிந்துள்ளது.

***Key words:*** பொது சுகாதாரம் (Public Health), விழிப்புணர்வு (Awareness), சுகாதார மேம்பாடு (Health Promotion)

## “வீட்டு வன்முறைகளை குறைப்பதில் பொலிஸாரின் பங்கு : கல்முனை பொலிஸ் பிரிவை மையப்படுத்திய சமூகவியல் ஆய்வு”

**Supervisor**
*Mr. M. Riswan,*
*Lecturer (Prob.),*
*Faculty of Arts & Culture*
*SEUSL*

**Researcher**
*Miss. AR. Kifana Faslin,*
*Department of Social Sciences,*
*Faculty of Arts & Culture*
*SEUSL*

### ஆய்வுச்சுருக்கம்

மனித வாழ்வில் பல்வேறு சமூகப் பிரச்சினைகளை நோக்கி போராட வேண்டிய நிலை காணப்படுகின்றது. அவ்வாறு போராட வேண்டிய பிரச்சனைகளுக்கு மத்தியில் வீட்டு வன்முறையானது சர்வதேச ரீதியிலும், தேசிய ரீதியிலும் பரவலாக பேசப்படுகின்ற ஒரு பாரிய பிரச்சினையாகவே இனங்காணப்பட்டுள்ளது. இவ்வாறு பரவலாக பேசப்பட்டுவரும் வீட்டுவன்முறையை குறைப்பதற்கு பல்வேறு நிறுவனங்கள் பங்காற்றி வருகின்றன. அந்தவகையில் பொலிஸார், நீதிமன்றம், இணக்கசபை, மதநிறுவனங்கள், சிறுவர், பெண்கள் பாதுகாப்பு அமைப்புகள் போன்றவை தமது பங்களிப்புகளை செலுத்திவருகின்றன. எனவேதான் வீட்டுவன்முறையை குறைப்பதில் பொலிஸாரின் பங்கு கல்முனை பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசங்களில் எத்தகைய மட்டங்களில் காணப்படுகின்றது என்பதையே இவ்வாய்வு நோக்கியுள்ளது. மேலும், கல்முனை பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசங்களில் வீட்டுவன்முறையை குறைப்பதற்கு பொலிஸாரின் பங்கு எத்தகைய மட்டங்களில் காணப்படுகின்றது என்பதை அடையாளப்படுத்துவதை பிரதான நோக்காகவும், கல்முனை பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசங்களில் வீட்டுவன்முறையின் நிலை எவ்வாறுள்ளது என்பது பற்றியும் அதற்கான காரணங்கள் மற்றும் தாக்கங்கள் என்பவற்றை கண்டறிவதை துணை நோக்கங்களாகவும் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வுக்கான தகவல்கள் முதலாம்நிலை, இரண்டாம்நிலை மூலகங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டன. முதலாம்நிலை தரவில் அவதானம், நேர்காணல் (Interview), வினாக்கொத்து (Questionnaire), இலக்குக் குழு கலந்துரையாடல் (Focus Group Discussion-FGD) போன்றவை அடங்குகின்றன. இரண்டாம்நிலை தரவில் பிரதேச செயலக அறிக்கைகள், பொலிஸ் அறிக்கைகள் போன்றவையும் அடங்குகின்றன. இவ்வாறு சேகரிக்கப்பட்ட தரவுகள் எண்ணளவான முறை (Quantitative Method), மற்றும் தர அளவிலான முறை (Qualitative Mmethod) என்பவற்றின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டன. இறுதியாக இவ்வாய்வு கல்முனை பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசங்களில் வீட்டுவன்முறைகள் ஒரு சில இடங்களில் பரவலாக காணப்படுவதுடன் இவ்விடங்களில் வீட்டுவன்முறை ஏற்படுவதற்கான காரணங்களை கண்டறிந்து அதனால் ஏற்படும் தாக்கங்களை குறைப்பதற்கு பொலிஸாரின் பங்களிப்பு காத்திரமாக அமைந்துள்ளது என்பதை முடிவாக கூறுகிறது.

**பிரதான சொற்கள் :** வீட்டுவன்முறை, பொலிஸ், தடுப்பு முறை (Preventive measures)

## இயந்திரமயமாக்கத்தினால் விவசாய சமூகத்தின் மீது ஏற்பட்டுள்ள தாக்கங்கள் - நிந்தவூர் கமநல சேவை பிரிவினை மையப்படுத்திய ஒரு சமூகவியல் ஆய்வு

**Supervisor**
*Mrs. AWN. Naleefa,*
*Lecturer (Prob.),*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

**Researcher**
*Miss. ST. Fathima Irfana,*
*Department of Social Sciences,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

**ஆய்வுச் சுருக்கம்**

தொழிநுட்பம், விஞ்ஞான ரீதியான வளர்ச்சி என்பன இன்றைய சமூகத்தில் பல மாறுதல்களை ஏற்படுத்தியுள்ளன. தொழிநுட்பத்தின் ஒரு பகுதியாகத்தான் இயந்திரமயமாக்கம் விளங்குகின்றது. இன்றைய நவீன இயந்திரங்களின் பயன்பாடு மிகவும் அத்தியவசியமாகி விட்டது. இயந்திரங்கள் இல்லாத வாழ்க்கையைக் கற்பனை செய்ய முடியாத அளவுக்கு அவை மக்களின் வாழ்வில் இன்றியமையாததாக காணப்படுகின்றன. எல்லாத் துறைகளிலும் புகுத்தப்பட்டுள்ள இயந்திரங்கள் இன்று உலகளவில் விவசாயத்துறையிலும் பல புதுமைகளை ஏற்படுத்தியுள்ளன. குறிப்பாக இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் விவசாயத்துறையில் இயந்திரங்களின் தாக்கங்கள் மிக அதிகமாக காணப்படுகின்றன. இன்று நாளுக்கு நாள் அதிகரித்து வரும் இயந்திரங்களின் பாவனையானது விவசாயம் மற்றும் விவசாய சமூகத்தின் மீது ஏற்படுத்தியுள்ள தாக்கங்களை ஆராய்வதற்காக அம்பாறை மாவட்டத்தின் நிந்தவூர் பிரதேசத்தினை மையப்படுத்தி இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. பல்வேறுபட்ட இயந்திரங்களின் வருகையால் விவசாய சமூகத்தின் இருப்பையே மாற்றியமைத்துள்ள நிலையில், இதனால் நிந்தவூர் விவசாய சமூகத்தின் மீது ஏற்பட்டுள்ள தாக்கங்களை கண்டறிவதை ஆய்வுப் பிரச்சினையாக கொள்ளப்பட்டுள்ளது. இவ் ஆய்வானது இயந்திரப் பாவனையால் விவசாய சமூகத்தின் மீது ஏற்பட்டுள்ள சமூகக் கலாசார, பொருளாதார தாக்கங்களை கண்டறியும் நோக்கில் ஆராயப்பட்டுள்ளது.

இவ்வாய்வுக்கான தகவல்கள் முதலாம் நிலைத் தரவுகள் (Primary data), இரண்டாம் நிலைத் தரவுகள் (Secondary data) ஆகிய மூலகங்களிலிருந்து பெறப்பட்டுள்ளன. முதலாம் நிலைத் தரவில் வினாக்கொத்து (Questionnaire), நேர்காணல் (Interview), அவதானம் (observation) இலக்குக் குழுவுடனான கலந்துரையாடல் (Focus group Discussion) போன்றவை அடங்குகின்றன. 20 வினாக் கொத்துக்கள் விவசாயக் குடும்பங்களை கொண்ட குறிப்பிட்ட ஒரு பிரிவில் நோக்க மாதிரி (Purposive Sampling) நுட்ப முறையின் அடிப்படையில் வழங்கப்பட்டன. 5 பேர் பிரதான தகவலாளர்களாக பயன்படுத்தப்பட்டுள்ளனர். 01 இலக்குக் குழுவுடனான கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது. இரண்டாம் நிலைத் தரவு சேகரித்தலில் பிரதேச செயலக அறிக்கைகள், கமநல மத்திய சேவை பிரிவின் அறிக்கைகள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு சேகரிக்கப்பட்ட தரவுகள் எண்ணளவான முறை (Quantitative method) மற்றும் தர அளவிலான முறை (Qualitative method) என்பவற்றின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

இறுதியாக, இவ்வாய்வில் இயந்திரமயமாக்கமானது விவசாய சமூகத்தில் தொழில் பாதிக்கப்படல், வருமானத்தில் தாக்கம், உற்பத்திச்செலவு அதிகரிப்பு, சமூக உறவுகளுக்கிடையில் விரிசல், கூட்டுக்குடும்ப அமைப்பில் பாதிப்பு, சமூக ஒற்றுமை இழத்தல், போன்ற எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளதுடன், வேலை இலகுவாக்கப்படல், நேரம் மீதப்படுத்தப்படல், உற்பத்தி அதிகரிப்பு போன்ற நேரான

தாக்கங்களும் காணப்படுகின்றன. இருந்தும் அதிகளவு எதிர்மறையான தாக்கங்களே ஏற்பட்டுள்ளன என்பதை முடிவாக உரைக்கப்பட்டுள்ளது.

***Key words:*** யந்திரமயமாக்கம், விவசாயம், விவசாய சமூகம்

# யுத்தத்திற்கு பின்னர் மீள்குடியேற்றப்பட்டோர் எதிர்நோக்கும் வாழ்வாதாரப் பிரச்சினைகள் : யாழ்ப்பாண மாவட்ட வடமராட்சிக் கிழக்குப் பிரதேசத்தை மையப்படுத்திய சமூகவியல் ஆய்வு


**Supervisor**
*Mr. M. Riswan,*
*Lecturer (Prob.),*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

**Researcher**
*Ms. SN. Vijayasingam,*
*Department of Social Sciences,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*



## ஆய்வுச் சுருக்கம்

மீள்குடியமர்தல் பற்றி றெவின்ஸ்ரைன் என்ற ஆய்வாளன் குறிப்பிடும் போது உயிர் கூற்றியல் காரணிகளான கருவளம், இறப்பு, ஆகியவற்றுடன் சமூக, பொருளாதார, அரசியல், பண்பாட்டுக் காரணிகளில் உந்தப்படும் மனிதனின் இயக்கமே என்கிறார். இலங்கையில் கடந்த மூன்று தசாப்தங்களாக இடம்பெற்று வந்த உள்நாட்டு இனமோதல் காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் அதிகளவு பாதிப்படைந்தனர். இதனால் பல்லாயிரக்கணக்கான மக்கள் வாழ்க்கையை இழந்து, வீடுகள், கட்டிடங்கள், வாழ்வாதாரச் சொத்துக்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் ஏனைய வசதிகளும் அழிவடைந்துள்ளன. யுத்தத்தினால் இடம்பெயர்ந்த மக்களிற்கான மீள்குடியேற்ற நடவடிக்கைகள் நடைபெறுகின்ற போதிலும் பாதிக்கப்பட்ட மக்கள் அனைவரும் வாழ்வாதாரத்தினை மீளப்பெற்றுள்ளனரா என்பது தொடர்பில் அறியவேண்டியுள்ளது. எனவே இவ்வாய்வானது வடமராட்சிக் கிழக்குப் பிரதேச மீள்குடியமர்த்தப்பட்ட மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகளை அறிதலை பிரதானமான நோக்கமாகக் கொண்டுள்ளது. இவ்வாய்வுக்கு முதலாம், இரண்டாம் நிலைத் தரவு சேகரிப்பு நுட்பமுறைகளைப் பயன்படுத்தித் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளதுடன் இவ்வாறு சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் பகுப்பாய்வும் செய்யப்பட்டுள்ளது. மீள்குடியமர்த்தப்பட்டுள்ள இப்பிரதேச மக்களின் வாழ்வாதாரத்தை மீளக்கட்டியெழுப்புவதற்கு உட்கட்டமைப்பு, இருப்பிட, தொடர்பாடல், வைத்தியசாலை, வங்கிச்சேவை, போக்குவரத்து போன்றவசதிகள் நிறைவாக பூர்த்தி செய்யப்படாமையினால் மக்களின் வாழ்வாதாரத்தில் எதிர்மறையான விளைவுகளும், பின்னடைவுகளும் ஏற்பட்டுள்ளன என்பது இவ்வாய்விலிருந்து பெறப்பட்ட முடிவாகும்.



**Key Words:** மீள்குடியேற்றம் (Resettlement), வாழ்வாதாரம் (Livelihood)

## "சுகாதார நல சேவைகளைப் பெற்றுக் கொள்கின்ற நடத்தை மீதான மக்களின் மனோநிலை: இறக்காமம் மற்றும் தீகவாபி பிரதேசங்களை மையப்படுத்திய ஓர் ஒப்பீட்டாய்வு"


**Supervisor**
*Mr. AWN. Naleefa,*
*Lecturer (Prob.),*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

**Researcher**
*Mr. I. Mohamed Ilmy,*
*Department of Social Sciences,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*


### ஆய்வுச் சுருக்கம்


பிறப்பு, இறப்பு, நோய் ஆகியன மனிதனை போர்த்திக் கொண்ட கூறுகள். சுகாதார நலன் காக்கும் பல்வேறு அம்சங்கள் மருத்துவ உலகில் அடையாளப்படுத்தப்பட்டு விட்டன. இலங்கையில், 19ஆம், 20ஆம் நூற்றாண்டு காலப்பகுதியிலேயே சுகாதாரக் கொள்கைகள் உருவாக்கப்பட்டு, 1945களின் பிற்பகுதியில் வேகமாக சுகாதார நல சேவைகள் விஸ்தரிக்கப்பட்டன. ஆண்டுதோறும் வரவு, செலவுத் திட்டத்தில் சுகாதார சேவைக்கென அதிகமான பங்கினை இலங்கை அரசு ஒதுக்கீடு செய்வதன் மூலம் இன்று ஆசியாவிலேயே சிறந்த சுகாதார நல சேவைகளை வழங்கும் நாடுகளில் முதன்மை வகிக்கின்றது. இது இவ்வாறு இருக்க 21ஆம் நூற்றான்டில் தனியார் சுகாதார சேவைகளின் பரவுகை இலங்கையிலும் உச்சளவில் உள்ளன. இவற்றை நோக்கிய மக்களின் பயணமும் அதிகரித்தே வருகின்றது.

சுகாதார சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக மக்கள் பல்வேறு தேர்வுகளைக் கொண்டிருக்கின்றார்கள். இத்தேர்வு நடத்தையில் மக்களின் மனோநிலை மிக முக்கியமானது. இதில் இலவச மருத்துவ சேவைகளை விடுத்து மக்கள் குறிப்பாகப் பொருளாதாரப் பலவீனர்கள் கூட தனியார் துறைகளினை நோக்கிச் செல்வது ஒரு சமூகப் பிரச்சினையே. ஒரு ஆய்வாளன் என்ற வகையில், சமூகப் புலத்தில், சுகாதார நல சேவைகளினைப் பெற்றுக்கொள்ளும் வழிகளில் மக்கள் கொண்டுள்ள மனப்பாங்கு மற்றும் அதற்கான பின்னணி என்பவற்றை அறிவதை ஆய்வு நோக்கமாகக் கொண்டு, அம்பாறை மாவட்டத்தின், இறக்காம் மற்றும் தீகவாபி பிரதேசங்களை மையப்படுத்தி ஆய்வு செய்ததன் மூலம் பெறப்படும் உண்மைகள், ஆய்வுலகில் அடையாளப்படுத்தப்படுவதுடன், மக்களிடமும், சுகாதார சேவைகளிலும் எவ்வாறான மாற்றங்களைக் கொண்டுவரவேண்டும் என்பவற்றைப் பற்றி மக்களின் கருத்துக்களுடாக இவ்வாய்வு இனங்கான முயன்றுள்ளது.

இவ்வாய்வானது முதலாம் நிலை (Primary Data) மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் (Secondary Data) மூலமாகத் தரவுகளினைச் சேகரித்துள்ளது. முதலாம் நிலைத் தரவிற்க்காக 20 வினாக்கொத்துக்கள் (Questionnaire) ஆய்வுப் பிரதேசத்தில் நோக்க மாதிரி நுட்பமுறை அடிப்படையில், தெரிவு செய்யப்பட்டவர்களிடமிருந்து நேரடியாகத் தகவல்கள் பெறப்பட்டு பூரணப்படுத்தப்பட்டன. 10 நேர்காணல்கள் இடம்பெற்றதுடன், இரு இலக்குக்குழுக் கலந்துரையாடல்களும் மேற்கொள்ளப்பட்டன. இரண்டாம் நிலைத் தரவு மூலங்களான நூல்கள், அறிக்கைகள், வெளியீடுகள், பதிவுகள் என்பவற்றிலிருந்தும் தரவுகள் சேகரிக்கப்பட்டன. இவ்வாறு சேகரிக்கப்பட்ட தரவுகளைக் கொண்டு எண்ணளவிலான மற்றும் தரவளவிலான முறைகளில் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு, அட்டவணைகள், வரைபடங்கள் மூலமாக ஒப்பீடு செய்து வியாக்கியானம் செய்யப்பட்டுள்ளது.

இறுதியாக இவ்வாய்வில் ஆய்வுப் பிரதேசத்தில், மக்கள் சுகாதார நலத் தேடல் நடத்தை மீதான வித்தியாசமான மனோநிலையினைக் கொண்டிருக்கின்றார்கள். பெரும்பாலான மக்கள் அரச சுகாதார சேவை தொடர்பாக திருப்தியான மனோநிலையினைக் கொண்டிருக்கவில்லை. இம்மனோநிலையில், சமூகப், பொருளாதாரக் காரணிகள், கலாசார, பண்பாட்டு விடயங்கள், சேவைகளின் தரம், மதம், அமைவிடம், கிடைக்கப் பெறும் தன்மை, சமூகந்தஸ்த்து, கௌரவம், கல்விநிலை, பால்நிலை, தொழிலின் தன்மை, வயது, ஆதிக்கக் குழுக்கள், அனுபவம், நோயின் தன்மை, வைத்தியர்களின் நிபுனத்துவம் என்பன அதிகளவான தாக்கங்களைக் கொண்டுள்ளன போன்றவை கண்டறியப்பட்டுள்ளன. அரசாங்க சுகாதார சேவை பணியாளர்கள் தாங்களும் தங்கள் சேவையும் மக்களுக்காகவே என்ற மனோநிலையை உருவாக்கி, தனது சேவையை உயரிய சமூக சேவையாக நினைத்து செயலாற்றுவதன் மூலம் மக்களின் மனோநிலையில் தேவையான மாற்றங்களை இயல்பாகவே உருவாக்க முடியும்.

**Key Words:** Attitude, Health Care, Behavior

**"தாய்மார்களிடையே அதிக மகப்பேற்றில் தாக்கம் செலுத்தும் காரணிகள்: கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவை மையப்படுத்திய ஓர் ஆய்வு"**


**Supervisor**
*Mrs. AWF. Naleefa,*
*Lecturer (Prob.),*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

**Researcher**
*Miss. S. Safana,*
*Department of Social Sciences,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*



**ஆய்வுச் சுருக்கம்**

ஒவ்வொரு சமூகத்திலும் மக்களின் பிறப்புக்கள், இறப்புக்கள் ஆகியன தவிர்க்க முடியாதபடி முக்கியத்துவம் வாய்ந்தனவாகவுள்ளன. ஒரு குடும்பத்தில் பிறக்கும் குழந்தை அக்குடும்பத்தின் சொத்தாகக் கருதப்படுகின்றது. மறுபுறத்தில் ஐந்தாவது குழந்தையின் பின்னரான பிள்ளைப்பேறு வளர்முக நாடுகளில் கவலையோடு பார்க்கப்படுகின்றது. அதிக மகப்பேறானது வளர்ந்துவரும் நாடுகளில் ஒரு முக்கியமான பொதுச் சுகாதாரப் பிரச்சினையாக இருக்கின்றது. ஏனென்றால் சமூகத்திற்கும் சுகாதாரத்திற்கும் எதிரான அதனுடைய தொடர்பானது தாய்மார்களுக்கும் பிள்ளைகளுக்கும் கெடுதலை ஏற்படுத்துகின்றது. அதிக மகப்பேற்றுடன் தொடர்புபட்டதாக பலகாரணிகள் காணப்படுகின்றன. சமூக, கலாசார காரணிகள், மீள் இனப்பெருக்க நடத்தைகள் மற்றும் சுகாதாரசேவைகள் எளிதில் கிடைக்கக்கூடியதும் பயன்படக்கூடியதுமான தன்மை என்பனவாகும். மகப்பேறு என்பது ஒரு பெண் 28 வாரத்திற்குப் பின் கர்ப்பத்தைச் சுமப்பதைக் குறித்து நிற்கின்றது. இக்கற்கையின் படி அதிக மகப்பேறு என்பது ஒரு பெண் ஐந்து அல்லது ஐந்துக்கு மேற்பட்ட பிள்ளைகளை பெற்றெடுப்பதைக் குறித்து நிற்கின்றது. இன்று அதிக மகப்பேறானது பல்வேறு விளைவுகளை ஏற்படுத்திவருகின்றது. அந்தவகையில் கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவுகளிலுள்ள அதிக மகப்பேற்றுடைய தாய்மார்களை இவ்வாய்வு அடையாளம் காண முயற்சித்துள்ளது. இத்தகைய அதிகரித்த மகப்பேற்றில் செல்வாக்குச் காரணிகளைக் கண்டறிந்து அவற்றிற்கான மும்மொழிவுகளை விதந்துரைக்க இவ்வாய்வு முனைந்துள்ளது. இவ்வாய்வானது, கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவில் அதிக மகப்பேறுடைய பெண்கள் மீது தாக்கம் செலுத்தும் சமூக, கலாசார காரணிகளை கண்டறிதலை நோக்கமாகக் கொண்டுள்ளதுடன் மக்கள் மத்தியில் குடும்பத் திட்டமிடல் பற்றிய அறிவு மற்றும் பயன்பாடு பற்றியும் இவ்வாய்வு இனங்காணமுயன்றுள்ளது. இவ்வாய்வானது முதலாம் நிலைத் தரவுகள் (Primary Data) மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் (Secondary Data) ஆகிய இரு வழி முறைகளில் தரவுகளை சேகரித்துள்ளது. முதலாம் நிலைத் தரவாக 20 வினாக்கொத்துக்கள் (Questionnaire) மூலம் கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவில் நோக்க மாதிரி நுட்பமுறை அடிப்படையில் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. நேர்காணலுக்காக 10 பேர் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் 01 இலக்குக் குழுவுடனான கலந்துரையாடலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இரண்டாம் நிலைத் தரவுசேகரித்தலில், பிரதேச செயலக அறிக்கைகள், MOH ஆண்டறிக்கை, மற்றும் முன்னர் நடாத்தப்பட்ட ஆய்வுகள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறாக சேகரிக்கப்பட்ட தரவுகள் சாதாரணமுறை மூலமும் SPSS மூலமும் பகுப்பாய்வு செய்யப்பட்டு விளக்கப்படட்டுள்ளன. இறுதியாக இவ்வாய்வில் கிண்ணியாப் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவில் 19.3%ஆன அதிக மகப்பேற்றுடைய தாய்மார்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன் அதிக மகப்பேற்றில் தாக்கம் செலுத்தும் காரணிகளாக

இளவயதில் திருமணம் முடித்தல், இனம், குறைவானகல்வி, தொழிலின்மை, குறைந்த வருமானம், தனிக்குடும்ப அமைப்பு, எதிர்பாராத கர்ப்பம், குடும்பத் திட்டமிடல் பற்றிய குறைவான அறிவு, குடும்பத்திட்டமிடல் முறைகளின் பாவனை குறைவு போன்ற சமூக, கலாசாரக் காரணிகள் கண்டறியப்பட்டுள்ளன.

**Key Words:** அதிகமகப்பேறு, சமூக, கலாசார காரணிகள்

**"வீதி ஒழுங்கு முறைகள் தொடர்பான மக்களின் நடத்தைகள்: கிண்ணியாப் பிரதேசத்தை மையமாகக் கொண்ட ஒரு சமூகவியல் ஆய்வு"**

**Supervisor**
*Mr. M. Riswan,*
*Lecturer (Prob.),*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

**Researcher**
*Ms. MRF. Fairoosiya,*
*Department of Social Sciences,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

**ஆய்வுச் சுருக்கம்**

சர்வதேச ரீதியாக விபத்துக்கள் குறைவடைந்து கொண்டு செல்கின்றவேளை, ஆசிய நாடுகளில் அண்மைக் காலமாக விபத்துக்கள் அதிகரித்துக் காணப்படுகின்றமை அதிர்ச்சிதரக் கூடிய நிகழ்வாகவே கருதப்படுகின்றது. அண்மைக் காலத்தில் சர்வதேச ரீதியாகவும், தேசிய ரீதியாகவும் பாரிய ஒரு சமூகப் பிரச்சினையாக வீதி ஒழுங்கு முறைகள் புறக்கணிக்கப்படுதல் காணப்படுகின்றது. வீதி ஒழுங்கு முறைகளை நடைமுறைப்படுத்துவதற்கு பல்வேறு நடவடிக்கைகள், திட்டங்கள், விழிப்புணர்வுகள், தண்டனைகள், சட்டங்கள் கொண்டுவரப்பட்டுள்ள போதிலும் இதில் மக்களின் நடத்தையானது வீதி ஒழுங்குகளை மீறுவதாய் உள்ளது. எனவே கிண்ணியாப் பிரதேசத்தில் வீதி ஒழுங்கு முறைகள் தொடர்பாக மக்களது நடத்தைகள் எத்தகைய நிலையில் உள்ளது என்பதை இவ்வாய்வு கண்டறிந்துள்ளது. மேலும் இவ்வாய்வானது வீதி ஒழுங்கு முறைகள் தொடர்பாக மக்கள் எத்தகைய எதிர்தாக்கங்களை கொண்டுள்ளார்கள் என்பதை கண்டறிதலை பிரதான நோக்கமாகவும், வீதி ஒழுங்குகள் மீறப்படுவதால் ஏற்படும் விளைவுகளையும், வீதி ஒழுங்குகள் தொடர்பாக மக்கள் எத்தகைய விழிப்புணர்வுடன் இருக்கிறார்கள் என்பதை கண்டறிவதையும், வீதி ஒழுங்குகளை மீறாதவண்ணம் ஆலோசனைகளை முன்மொழிதல் போன்ற துணை நோக்கங்களையும் கொண்டுள்ளது. இது அளவுசார் (Quantitative), பண்புசார் (Qualitative) ஆய்வு என்பதனால் இவ்வாய்வுக்கான தகவல்கள் முதலாம்நிலை, இரண்டாம்நிலை மூலகங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டன. முதலாம்நிலை தரவுக்காக அவதானம் (Observation), நேர்காணல் (Interview), வினாக்கொத்து (Questionnaire), இலக்குக் குழு கலந்துரையாடல் (Focus Group Discussion-FGD) போன்றவை மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டு அவை MS-Excel, SPSS போன்ற மென்பொருள் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. இரண்டாம்நிலை தரவுக்காக புத்தகங்கள், இணையங்கள், பிரதேச செயலக அறிக்கைகள், போக்குவரத்து பொலிஸ் பிரிவு அறிக்கைகள் போன்றவை மூலமும் தரவுகள் சேரிக்கப்பட்டுள்ளன. இறுதியாக இவ்வாய்வானது கிண்ணியாப் பிரதேசத்தில் வீதி ஒழுங்கு முறைகள் தொடர்பான மக்களின் நடத்தைகளுக்கு பிரதான காரணம் மக்கள் வீதி ஒழுங்கு முறைகள் தொடர்பாக போதியளவான அறிவின்மையுடன் காணப்படுகின்றமையே ஆகும் என்பதை முடிவாக உரைக்கின்றது.

**பிரதான சொற்கள் (Key Words) :** வீதி ஒழுங்கு (Traffic rules), மக்களின் நடத்தை (Peoples behavior), விழிப்புணர்வு (Awareness)